பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 சித்திரை 08 திங்கட்கிழமை (20-04-1992) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர் 144

# இந்தியா புலிகளை தடை செய்தாலும் இலங்கையில் தாக்கம் இருக்காது!

## துணை வெளிவிவகார அமைச்சர் நேற்று கொழும்பில் அறிவிப்பு

கொழும்பு, ஏப்ரல் 20

தமிழீழ விடுதலைப் புலிகள் மீது இந்தியாவில் தடை விதிக்கப்படுவது இலங்கையில் தாக்கத்தை ஏற்படுத்தாது.

—இவ்வாறு இலங்கையின் வெளிவிவகாரத் துணை அமைச்சர் திரு. ஜோன் அமரதுங்கா தகவல் வெளியிட்டிருக்கிறார்.

விடுதலைப் புலிகளைத் தடைசெய்வது குறித்து ஆக்கபூர்வமான முடிவு விரைவில் மேற்கொள்ளப்படும் என்று இந்தியப் பிரதமர் திரு. நரசிம்மராவ் சென்னையில் நேற்று முன்தினம் அறிவித்திருந்தார்.

அதனைத் தொடர்ந்து இந்திய அரசு விடுதலைப் புலிகள் இயக்கம் மீதான தடையை எந்த நேரத்திலும் அறிவிக்கலாம் என்ற பரபரப்பு எழுந்துள்ளது

அந்தப் பரபரப்பைத் தொடர்ந்து இந்திய வானொலியின் கொழும்புச் செய்தி

[5 ஆம் பக்கம் பார்க்க]

## பௌத்த குருமார் குழுவின் வருகை எப்போது என்பது நிச்சயமில்லை!

யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்ய உள்ள பௌத்த குருமார் தூதுக் குழு எப்போது இங்கு வந்து சேரும் என்பது நிச்சயமில்லை என்று இப்போது தெரியவருகிறது.

பௌத்த பிக்குகள் தூதுக் குழு சனிக்கிழமை கொழும்பிலிருந்து புறப்பட்டு விட்டதாக பி. பி. சி. போன்ற செய்தி ஏஜன்சிகள் அறிவித்திருந்த போதிலும்—

தூதுக்குழு அன்றைய தினம் புறப்படவில்லை என்று கொழும்புப் பத்திரிகைகள் நேற்றுச் செய்தி வெளியிட்டிருந்தன.

இந்தக் குழப்ப நிலை குறித்து யாழ்ப்பாணத்தில் உள்ள செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு வட்டாரங்களில் வினவிய போது—

பௌத்த குருமார் தூதுக் குழு இங்கு வருவது குறித்துத் தமது தலைமையகத்திலிருந்து எவ்வித தகவலும் தமக்கு கிடைக்கவில்லை என்று அவை தெரிவித்தன.

தூதுக்குழு வருகை குறித்து எமது கொழும்பு அலுவலகத்திலிருந்து தகவல் ஏதும் கிடைத்தால் அதன் பின்னர் விடுதலைப் புலிகள் தலைவர்களுடன் கலந்தாலோசிப்போம். அவர்களின் சம்மதம் பெறப்பட்ட பின்னர் எமது கொழும்பு அலுவலகத்துக்கு தகவல் கொடுப்போம். தூதுக் குழுவினர் பலாலி வந்ததும் அங்கிருந்து அவர்களை அழைத்து வருவோம்''—இவ்வாறு செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு யாழ் அலுவலக அதிகாரி உதயனுக்கு தெரிவித்தார்.

இதேசமயம் தூதுக்குழுவினர் இன்று அல்லது நாளை கொழும்பிலிருந்து புறப்படக் கூடும் என்று கொழும்புச் செய்தி ஒன்று தெரிவித்தது.

[அ-3-10]

## தெரிவுக்குழு யாழ். வருவது குறித்து பிக்குமார் புலிகளுடன் பேசுவர்

கொழும்பு, ஏப். 20

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண நியமிக்கப்பட்டிருக்கும் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் பிரதிநிதிகள் யாழ்ப்பாணம் வருவது குறித்து—

விடுதலைப் புலிகள் இயக்க தலைவர்களுடன், வடக்கே வரும் பௌத்த பிக்குமார் குழு பேச்சு நடத்தும்.

கொழும்பில் விஷயமறிந்த வட்டாரங்கள் இத் தகவலை வெளியிட்டன;

விடுதலைப் புலிகள் இயக்கத்தை இந்தியா தடை செய்யக் கூடும் என பேச்சடிபடுவது தெரிந்ததே. அத்தகைய நிலை ஒன்று ஏற்படுவதற்கு முன்னா விடுதலைப் புலிகளுடன் உத்தியோக பூர்வ மட்டத்திலான பேச்சுக்களை தெரிவுக்குழுவோ அல்லது அரசோ ஆரம்பித்து விட வேண்டும் என்றும்—

அப்படி ஆரம்பித்து விட்டால், அதன் பின்னர் புலிகள் இயக்கத்தை இந்தியா தடை செய்தாலும் அது புலிகளுடன் உத்தியோகபூர்வமாக பேச்சு நடத்துவதை எந்த வகையிலும் தடுக்காது என்றும் தெரிவுக்குழு வட்டாரங்கள் கருதுகின்றனவாம்.

இதற்கிடையில்—

யாழ்ப்பாணம் வரும்

[5 ஆம் பக்கம் பார்க்க]

### மஹரகம குண்டு வெடிப்பு:

## வெடிகருவி இயக்கியவர் சுதந்திரக் கட்சிக்காரராம்

கொழும்பு, ஏப். 20

மஹரகம குண்டு வெடிப்புச் சம்பவத்தின் போது சுதந்திரக்கட்சிக்காரர் வெடி கருவியை இயக்கினார் என்றும் அது தொடர்பாக ஏழு பேர் காவலில் வைக்கப்பட்டுள்ளனர் என்றும் கொழும்பு தினகரன் நேற்று செய்தி வெளியிட்டது.

பழுகாமம் சுதந்திரக் கட்சிக் கிளைச் செயலாளரே வெடி குண்டுக் கருவியை இயக்கினார் என்றும்—

அச்சம்பவத்தில் சபாரத்தினம் என்பவரும் சுதந்திரக் கட்சிக் கிளைப் பொருளாளர் செல்வநாயகமும் முக்கிய பங்கு வகித்தனர் என்றும் சிரேஷ்ட பொலீஸ் அதிகாரிகள் ஊர்ஜிதம் செய்தனர்.

சபாரத்தினம் அம்பாறை மற்றும் மஹரகம ஆகிய இரு குண்டு வெடிப்புகளிலும் செல்வநாயகம் மஹரகம குண்டு வெடிப்பிலும் முக்கிய பங்கு வகித்தனர். அம்பாறைக் குண்டு வெடிப்பிலும் செல்வநாயகம் பங்கு பற்றியிருக்கலாம் என்றும் பொலீஸார் கூறினர்.

அம்பாறைக் குண்டு வெடிப்புக்குப் பயன்படுத்தப்பட்ட பஸ் சபாரத்தினத்தால் கட... [illegible]

[5 ஆம் பக்கம் பார்க்க]

## வவுனியாவில் சிப்பாய் பலி!

யாழ்ப்பாணம், ஏப். 20

நேற்றுக்காலை வவுனியா புளியங்குளம் முகாமில் இருந்து புலிகளின் காவலரண்களை நோக்கி முன்னேறி வந்த படையணி மீது புலிகள் தாக்குதல் நடத்தினர். தாக்குதலில் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டார்.

முகாமில் இருந்து 150 யார் தூரத்தில் வைத்து மேற்கொள்ளப்பட்ட இந்த தாக்குதலையடுத்து படையணி பின் வாங்கி முகாம் திரும்பியது.

இராணுவத்தினரிடம் இருந்து ரி-56 ரக துப்பாக்கி ஒன்று, அதற்குரிய ரவைக் கூடு ஒன்று, ரவைகள்-30 ஆகியன புலிகளால் கைப்பற்றப்பட்டன.

[உ-3]

## காத்தான்குடிப் பகுதியில் காவலரண்கள் மீது தாக்கு!

மட்டக்களப்பு, ஏப். 20

காத்தான்குடி பிரதான வீதியிலுள்ள பொலீஸ் மற்றும் இராணுவ காவலரண்கள் மீது கடந்த வியாழக்கிழமை விடுதலைப் புலிகள் தாக்குதல்கள் நடத்தினர் என்று கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன

இத் தாக்குதல் சுமார் 3 மணித்தியாலங்கள் வரை தொடர்ச்சியாக நீடித்தன என்றும்—

வாவிப் பக்கமாகவும் பிரதான வீதிப்பக்கமாகவும் வந்த புலிகளே தாக்குதல் நடத்தினர் என்றும் கூறப்பட்டது.

படையினர் ஹெலிக்கொப்டர் சகிதம் பதில் தாக்குதல் நடத்தினர் என்றும்—

ஹெலிக்கொப்டர் தாக்குதலில் பிரதான வீதியிலுள்ள சில கடைகள் சேதமானதாகவும் அறிவிக்கப்படுகிறது.

[உ-த]

## 750 தமிழ் அகதிகள் நாளை விமானத்தில் திருமலைக்கு!

கொழும்பு, ஏப் 20

தமிழகத்தில் இருந்து விமான மூலம் இலங்கைத் தமிழ் அகதிகள் தாயகம் திரும்புவது இவ்வாரத்தில் ஆரம்பமாகும்.

முதலாவது தொகுதியாக 750 அகதிகள் நாளை இந்திய விமானம் மூலம் சீனக்குடா விமான நிலையத்தை வந்தடைவர்.

புனர்வாழ்வு அதிகார சபைத் தலைவர் திலக் சந்திரசேகர இத்தகவல்களை வெளியிட்டார்.

வாரம் 750 அகதிகள் வீதம் விமான மூலம் திருமலைக்குக் கூட்டிவர இந்திய அரசு இணங்கியிருக்கிறது.

மாத இறுதிக்குள் 2 ஆயிரத்து 500 அகதிகள் தாயகம் திரும்ப ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

இதுவரை 15 ஆயிரத்து 300 தமிழ் அகதிகள் நாடு திரும்பியுள்ளனர்.

—இவ்வாறு அவர் மேலும் சொன்னார்.

[உ-எ]

## இம்முறை மே தினத்தில் விடுதலைக்கான அறைகூவல்

யாழ்ப்பாணம், ஏப். 20

எதிர்வரும் மே தினத்தை விடுதலைக்கான அறைகூவல் விடுக்கும் நாளாகக் கொண்டாடுவதற்கு யாழ். மாவட்டத்தில் உள்ள தொழிற்சங்கங்கள் பலவும் ஒன்றிணைந்து முடிவு செய்துள்ளன.

அதற்குரிய ஏற்பாடுகளைச் செய்வதற்காக செயற்பாட்டுக் கூட்டுக் குழு ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

மே தினத்தை இம்முறை எவ்வாறு கொண்டாடுவது என்பது பற்றிய கலந்துரையாடல் தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றது.

பிரஸ்தாப கலந்துரையாட

[6 ஆம் பக்கம் பார்க்க]

## அன்னை பூபதி நினைவு நாள் குடாநாட்டில் அனுஷ்டிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 20

அன்னை பூபதி 4 ஆவது ஆண்டு நினைவாக நேற்று குடாநாட்டில் மூன்று இடங்களில் உண்ணாவிரதம் நடைபெற்றது. பெரும் எண்ணிக்கையான மக்கள் அவற்றில் கலந்து கொண்டனர்.

வலிகாமம் பிரிவில் யாழ் இந்துக் கல்லூரியிலும்—

வடமராட்சியில் வல்வெட்டித்துறை அம்மன் கோவிலுக்கு முன்பாகவும்—

தென்மராட்சியில் கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயத்திலும்—உண்ணாவிரதம் அனுஷ்டிக்கப்பட்டது.

உண்ணாவிரதத்தை அடுத்து மாலை நினைவுக் கூட்டங்களும் நடைபெற்றன. விடுதலைப் புலிகள் பிரமுகர்கள் அக் கூட்டங்களில் உரையாற்றினர்.

[உ-3-15]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ கணபதி கலையமுதம் ★

திருநெல்வேலி வடக்கு, யாழ்ப்பாணம்.
[கலா மன்றம் முன்பாக]

இன்று 20-04-1992

புதிய வகுப்புகள் ஆரம்பம்

★ கேக் ஐசிங் ★ தையற் கலை
★ சமையற் கலை ★ பூ வேலைகள்
★ கைவேலைகள் ★ கூந்தல் அலங்காரம்
★ கோலம் ★ வர்ணம் தீட்டுதல்

[20642]



★ O/L ★

க. பொ. த. சாதாரணதரம்

பகல் முழுநேர வகுப்பு

யூனிவேர்சல்

கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

[சி-1890]



கவின் கலைகள் பயிலகம்

*School of Fine Arts*

வழங்கும்
நாவற்குழியூர் சங்கீத கலாவித்தகர்
சி. நாகராசா அவர்களின்

★ இசைக் கச்சேரி ★

காலம்: 21-04-1992 [செவ்வாய்] மாலை 6-45 மணி
இடம்: திருமறைக் கலாமன்ற அரங்கு

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

பிரவேசம்: இலவசம்

V.J. கொன்ஸ்ரன்ரைன்,
பொதுச் செயலாளர்.

திருமறைக் கலாமன்றம்,
238, பிரதான வீதி, யாழ்.

[சி-1933]



நீரு ரியூசன் சென்ரர்

ஸ்ரேசன் றோட், கோண்டாவில்.

O/L DAY CLASS

23 04-1992 [வியாழன்]

ஆரம்பமாகின்றது

8 - 1 மணி வரை

விஞ்ஞானம் — இரா. செல்வவடிவேல்
கணிதம் — ரவி
தமிழ் / சமயம் — பண்டிதர்
சமூகக்கல்வி — பிரபல ஆசிரியர்
ஆங்கிலம் — தர்மலிங்கம்
வர்த்தகம் — ராஜா

— நிர்வாகி.

[சி-1876]



விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.
(O/L வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)

O/L
பிரிவு — 3 DAY CLASSES (8 00 — 3-00)
பிரிவு — 4 EVENING CLASSES (3-00 — 6 00)

புதிய பிரிவுகள் ஆரம்பம்: 23 - 04 - 1992

★ 92 ஆம் ஆண்டு O/L மாணவர்களுக்கான அனுமதிகள் 19-04 92 தொடக்கம் 07-05-92 மட்டுமே வழங்கப்படும். அதன் பின் வழங்கப்பட மாட்டாது.

★ விடுதி வசதி செய்து கொடுக்கப்படும்.

[சி-1900]


## கலை, வர்த்தக வகுப்புகள்

உடுவில், ஏப். 20

இணுவில் சைவப்பிரகாச மகா வித்தியாலயத்தில் ஜி.சி.ஈ. உயர்தர கலை, வர்த்தக வகுப்புகள் புதிதாக ஆரம்பிக்கப்பட உள்ளன.

[இ-90]

## இலவச வகுப்புகள்

யாழ்ப்பாணம் ஏப். 20

விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கத்தினால் யாழ். சென்றோக்ஸ் பாடசாலையில் நடத்தப்பட்டு வந்த கல்வி வளர்ச்சிக் கழக இலவச வகுப்புக்கள், மீண்டும் ஈஸ்டர் விடுமுறைக்குப் பின் இன்று காலை 9 மணிக்கு ஆரம்பமாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இலவச சங்கீத நடன வகுப்புக்களும் நடைபெற உள்ளதால், இணைய விரும்பும் மாணவர்கள் தமது பெயர்களைப் பதிவு செய்யும்படி கேட்கப்பட்டுள்ளது.

[ ]

## கண்டியில் பட்டாசினால் 35 பேர் காயம்

கொழும்பு, ஏப் 20

புதுவருடத் தினத்தன்று பட்டாசு வெடிக்க வைத்து குதூகலித்ததன் காரணமாக கண்டிப் பகுதியில் மொத்தம் 35 பேர் வரை காயமடைந்துள்ளனர். இவர்கள் கண்டி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இளைஞர் குழுக்கள் வெடிக்க வைத்த பட்டாசுகளில் சிக்கியே வீதியில் போய் வந்தோரில் பலர் காயமுற்றதாக கொழும்புப் பத்திரிகை செய்தி ஒன்று தெரிவித்தது

[உ]

## பென்சன் வவுச்சர்கள்

வரணி, ஏப். 20

யாழ். மாவட்ட ஓய்வூதியர்களுக்கான ஏப்ரல் மாத பென்சன் வவுச்சர்கள் நேற்று முன்தினம் தபாலில் சேர்க்கப்பட்டனாகையால் பெரும்பாலும் அவை இன்று திங்கட்கிழமை சகலருக்கும் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது

[உ-3 170]

## சிறிமாவுக்கு வயது 76

சுதந்திரக் கட்சித் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா கடந்த வெள்ளிக்கிழமை தமது 76 ஆவது பிறந்த தினத்தைக் கொண்டாடினார். [உ-எ]

## உடற் தகைமை பயிற்சி நடத்த அறிவுறுத்து

உடுவில், ஏப். 20

பாடசாலைகளில் காலை நேர வகுப்புகள் ஆரம்பமாக முன்னர் மாணவர்களுக்கு உடற்தகைமைப் பயிற்சி வழங்கப்பட வேண்டும்.

மேற்கண்டவாறு யாழ்ப்பாண மாவட்ட பாடசாலைகளுக்கு யாழ்ப்பாண கல்வித் திணைக்கள உடற்கல்வி, உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. த அருணகிரிராசா அறிவித்துள்ளார்

பாடசாலை அதிபர்களுக்கு அவர் அனுப்பி வைத்துள்ள சுற்று நிருபத்தில், உடற் தகைமை பயிற்சிகள் யாழ்ப்பாண மாவட்டப் பாடசாலைகளில் தற்போது ஒழுங்காக நடைபெற்று வருகின்ற போதிலும், சில பாடசாலைகள் இப்பயிற்சியை புறக்கணித்து வருவது தெரியவந்துள்ளது. இரண்டாம் தவணையின் போது இப் பயிற்சியை புறக்கணிக்கும் பாடசாலைகள் மீது ... நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

[இ- 90]


யாழ். மாவட்ட புடைவை நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்.

பயிலுநர் தேவை

சங்கத்தின் கைத்தறி நெசவுத் தொழிற்சாலைகளில் நெசவு பயில விரும்புவோர், அருகிலுள்ள நெசவுத் தொழிற்சாலை நெசவு போதனாசிரியர்களுடன் அல்லது கீழ் வரும் விலாசத்தில் தொடர்பு கொள்ளவும்.

பயிற்சிக் காலம்: 3 மாதம்
விசேட படி: நாளொன்றிற்கு ரூபா 15/-

பதில் பொதுமுகாமையாளர்,
யாழ். மாவட்ட புடைவை நெசவாளர்-
கூட்டுறவுச் சங்கம்,
இருபாலை வீதி,
கோண்டாவில்.

[சி/1927)



அகில இலங்கை பரஸ்பர

சகாயநிதிச் சங்கம் லிமிட்டெட்,
வட்டுக்கோட்டை.

ஸ்தாபிதம்: 1957 பதிவு இலக்கம்: S 154

தேவை

முகவர்கள்

கமிஷன் அடிப்படையில் அங்கத்தவர்களைச் சேர்ப்பதற்கும் பணம் வசூலிப்பதற்கும் யாழ் மாவட்டத்தில் கடமையாற்ற முகவர்கள் தேவை 20 — 50 வயதிற்குட்பட்ட தகுதிவாய்ந்த இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

● பிறப்புச் சான்றிதழ், கல்வித் தகைமைச் சான்றிதழ், நற்சாட்சிப் பத்திரங்கள், தேசிய அடையாள அட்டையின் போட்டோ பிரதி ஆகியவற்றுடன் 25 - 04 - 1992 க்கு முன் விண்ணப்பிக்கவும்.

- பொது முகாமையாளர்.

[சி-1897]



31ஆம் நாள் நினைவஞ்சலி

★  ★

திருமதி
ஆறுமுகம் கனகம்மா
[புங்குடுதீவு - 11ஆம் வட்டாரம்]

திதி: 2? — 04 — 1992

குலவிளக்கே! நீங்கள் அணைந்தீர்கள்!
குமுறுகிறோம் உங்கள் நினைவால்
வேரோடு மரம் புரண்டு
வீதியிலே வீழ்ந்தது போல
பாழும் உலகிலே எம்மை விட்டு
பாதியிலே சென்று விட்டீர்கள்
மின்னலென நீங்கள் மறைந்து
மாத மொன்று சென்றிடினும்
உங்கள் நினைவு எங்கள் உள்ளங்களில்
அணையாத தீபமாய் என்றும் ஒளிரும்.

தங்கள் ஆத்மா சாந்தியடைய நாள் தோறும் ஆண்டவனைப் பிரார்த்திக்கும்:

கணவர் - கு. அ. ஆறுமுகம்,
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

73, கே. கே. எஸ். வீதி,
கொக்குவில்.

[20646]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொது வேலை நிறுத்தம்: எதிரணிகள் பெரும் முஸ்தீபு!

கொழும்பு, ஏப். 20

அடுத்த யுத்தத்தில் பொது வேலை நிறுத்தம் ஒன்றை நடத்த கூட்டுத் தொழிற் சங்க சம்மேளனம் திட்டமிட்டு வருவதாக, சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் அலவி மௌலானா தெரிவித்திருக்கிறார்.

இச் சம்மேளனத்தில் சுதந்திரக்கட்சி, மக்கள் ஐக்கிய முன்னணி, லங்கா சமசமாஜக் கட்சி, ஸ்ரீ லங்கா மக்கள் கட்சி ஆகியவற்றின் தொழிற்சங்கங்களும், அரசியல் சார்பற்ற லங்கா குரு சங்கமய போன்ற தொழிற் சங்கங்களுமாக மொத்தம் 23 தொழிற் சங்கங்கள் அங்கம் வகிக்கின்றன.

தொழிற் சங்கங்களின் செயற்பாடுகளைக் கட்டுப் படுத்தும் அவசரகாலச் சட்ட விதிகளைத் தளர்த்துதல், தனியார் மயப்படுத்தல் என்ற பெயரில் முதலாளிகளிடம் அரச நிறுவனங்களை ஒப்படைப்பதை நிறுத்தல், அரச கூட்டுத்தாபன மற்றும் தனியார் துறை ஊழியர்களுக்கு 50 சதவீத சம்பள உயர்வு வழங்குதல் ஆகிய கோரிக்கைகளை முன்வைத்தே இப் போது வேலை நிறுத்தம் நடத்தப்படும் என்று ஜனாப் மௌலானா சொன்னார்.

### அடையாள வேலை நிறுத்தம்

இம்மாதம் 29 ஆம் திகதி இக்கோரிக்கைகளை முன் வைத்து ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தம் மேற்கொள்ளப்படும் என்றும் —

பின்னர் மாகாண ரீதியில் அடையாள வேலை நிறுத்தங்கள் மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

அடுத்த மாத இறுதிக்குள் நாடளாவிய ரீதியில் பொது வேலை நிறுத்தம் ஆரம்பிக்கப்படும் என்றும் —

இப் பொது வேலை நிறுத்தத்தில் கலந்து கொள்ளும்படி இலங்கை வர்த்தக ஊழியர் சங்கத்துக்கும், இலங்கை வங்கி ஊழியர் சங்கத்துக்கும் அழைப்பு விடுக்கப்பட்டிருப்பதாகவும் ஜனாப் அலவி மௌலானா மேலும் கூறினார்.

இப் பொது வேலை நிறுத்தம் தொடர்பாக இம்மாதம் 29 ஆம் திகதி கொழும்பு, டிமெல் பூங்காவில் பொதுக் கூட்டம் ஒன்று நடத்தப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. [உ-எ]

# தெரிவுக்குழு அமர்வு ஒத்திவைக்கப்பட்டது

கொழும்பு, ஏப். 20

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண நியமிக்கப்பட்ட நாடாளுமன்றத் தெரிவுக்குழு, முன்னர் திட்டமிட்டிருந்த திகதிகளில் — நாளையும், 23 ஆம் திகதியும்— தனது அமர்வுகளை நடத்தாது.

யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்யும் பௌத்த பிக்குமார் குழு, யாழ்ப்பாணத்திலிருந்து — விடுதலைப் புலிகளிடமிருந்து — பெற்று வரும் முடிவை அறிந்து கொண்ட பின்னர், தெரிவுக்குழு அமர்வை நடத்துவதற்கு வசதியாக அது ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது, விஷயமறிந்த வட்டாரங்கள் இத் தகவலை வெளியிட்டன

அமர்வு ஒத்திவைக்கப்பட்டிருப்பது பற்றிய அறிவித்தல் தெரிவுக்குழு உறுப்பினர்களுக்கு உத்தியோகபூர்வமாக அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது. அடுத்த மாத ஆரம்பத்தில் தெரிவுக்குழு மீண்டும் கூடும் எனத் தற்போது எதிர்பார்க்கப்படுவதாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன. (உ)

## புலிகளின் காவலில் உள்ள

# பொலீஸார் சிலரை விடுவிக்க முடியும்!

## யாழ். வரும் பிக்குமார் நம்பிக்கை

கொழும்பு, ஏப். 20

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினால் காவலில் வைக்கப்பட்டுள்ள படையினர் மற்றும் பொலீஸ்காரர்களில் சிலரை புலிகள் இயக்கத்தினருடனான உத்தேச பேச்சுக்களைத் தொடர்ந்து விடுவிக்க முடியும். இவ்வாறு யாழ்ப்பாணம் வரவிருக்கும் பௌத்த மதகுருமார் தூதுக்குழு நம்பிக்கை தெரிவித்துள்ளது.

அரசியல் வட்டாரங்களை மேற்கோள் காட்டி 'த ஐலண்ட்' பத்திரிகை இச் செய்தியை வெளியிட்டிருக்கிறது.

தடுத்து வைக்கப்பட்டுள்ள பாதுகாப்புப் படையினரில் சிலரை விடுதலை செய்யும்படி புலிகள் இயக்கத் தலைவர்களுடனான பேச்சுக்களின் போது பௌத்த மதகுருமார்கள் விசேட வேண்டுகோள் ஒன்றை விடுப்பர் என்றும் —

விடுதலைப் புலிகள் தலைவர்கள் இதனை ஏற்பர் என்றும் அவ் வட்டாரங்கள் நம்பிக்கை தெரிவித்தன. [உ-எ]

## குரக்கன் பிஸ்கட் தயாரிப்பு

உரும்பராய், ஏப். 20

உரும்பராயில் இயங்கும் தமிழீழ ஆய்வு நிறுவனத்தின் பேக்கரியில் குரக்கன் மாவுடன் கோதுமை மாவைக் கலந்து பிஸ்கட் தயாரிக்கிறார்கள்.

கொழும்பு மலிபன் உற்பத்தியைப் போன்று குரக்கன் மாறி பிஸ்கட், குரக்கன் கிறீம் பிஸ்கட் ஆகியவையும் தயாரிக்கப்படுகின்றன என்றும் அறிவிக்கப்படுகிறது.

## 9 மீனவர் விடுதலை

யாழ்ப்பாணம், ஏப். 20

இந்தியக் கடற்பகுதியில் மீன் பிடித்த குற்றச்சாட்டுக்காக கைதாகி, தமிழகத்தில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த 9 இலங்கை மீனவர்கள் கடந்த 10 ஆம் திகதி விடுவிக்கப்பட்டனர். அவர்களைத் தாயகத்துக்குக் கூட்டி வரவும், தமிழ் நாட்டில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் அவர்களது வள்ளங்களை திரும்பக் கொண்டு வருவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. [உ]

# கிட்டு யாழ்ப்பாணத்திலாம்! இந்திய பத்திரிகை கூறுகிறது

கொழும்பு, ஏப். 20

விடுதலைப் புலிகள் பிரமுகரான சதாசிவம் கிருஷ்ணகுமார் [கிட்டு] சுவிஸ் தலைநகர் ஜெனிவாவிலிருந்து வெளியேறி — இரகசியமாக —நேபாளம், பம்பாய், கேரள மார்க்கமாக யாழ்ப்பாணம் சென்றுள்ளாராம்!

இந்தியப் பத்திரிகைகள் இவ்வாறு செய்தி வெளியிட்டுள்ளன!

விடுதலைப் புலிகளின் தலைவர் திரு. வே. பிரபாகரனைச் சந்தித்துப் பேசுவதற்காகவே திரு. கிட்டு யாழ்ப்பாணம் சென்றிருப்பதாகவும் அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டது.

மே முதல் வாரத்தில் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் முக்கிய மந்திராலோசனைக் கூட்டம் ஒன்றை நடத்தவிருக்கின்றார் என்றும் —

அக்கூட்டத்தில் திரு. கிட்டு. திரு. லோறன்ஸ் திலகர் ஆகியோரும் பங்குபற்றுவர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதற்காக திரு திலகர் இம்மாத ஆரம்பத்திலேயே பாரிஸை விட்டுக் கிளம்பி விட்டார் என்றும் —

அவர் தற்போது நேபாளத்தில் தங்கியிருக்கிறார். என்று கருதப்படுவதாகவும் —

திரு. கிட்டு நேபாள பாஸ் போர்ட்டைப் பாவித்து பம்பாய் ஊடாக கேரளாவுக்கு வந்து, பின்னர் கடந்த 7 ஆம் திகதி கேரளத்துறை ஒன்றின் ஊடாக மோட்டார் படகில் யாழ்ப்பாணம் சென்றார் என்றும் அச்செய்தியில் கூறப்பட்டது.

அவர் முஸ்லிம் போல வேடம் அணிந்து இந்தியாவுக்குள் பிரவேசித்தார் என்றும் —

கேரளாவை விட்டுப் புறப்படும்போது ஒரு மீனவர் போல உடையணிந்திருந்தார் என்றும் அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டது. [உ]

# பலாலி முகாமிற்கு ஜனாதிபதியின் மனைவி

கொழும்பு, ஏப் 20

புத்தாண்டு தினத்தன்று திருமதி ஹேமா பிரேமதாசா பலாலி இராணுவ முகாமுக்கு விஜயம் செய்ததாக அறிவிக்கப்படுகிறது.

அவர் போர் முனையில் உள்ள இராணுவத்தினருக்கு இனிப்புப் பொதிகளை வழங்கினார். திருமதி ஹேமாவின் திடீர் விஜயம் இராணுவத்தினருக்குப் பெரும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியதாம்.

இராணுவத்தினரின் போராட்ட உணர்வை அவரின் விஜயம் மேலும் வளர்த்திருப்பதாக அங்கு பேசிய வடபகுதி தளபதி பிரிகேடியர் விஜய விமலரத்தினா தெரிவித்தார்.

தொண்டமனாறில் உள்ள முன்னணி காவலரணுக்கும் திருமதி ஹேமா பிரேமதாசா விஜயம் செய்தார். அங்கு செல்வது ஆபத்தானது என்று தளபதி விமலரத்தினா கூறியும் கேளாது அவரின் ஜீப்பில் திருமதி பிரேமதாசா தொற்றி ஏறி அங்கு சென்றாராம்.

திருமதி பிரேமதாசா திருகோணமலை, மன்னார் ஆகிய இடங்களிலுள்ள முகாம்களுக்கும் விஜயம் செய்தார் என அறிவிக்கப்பட்டது. [அ-த]

## குறுகிய கால பயிற்சி

உடுவில், ஏப். 20

திருநெல்வேலி அரசினர் மாவட்ட விவசாய பண்ணையில் படித்த யுவதிகளுக்கான குறுகிய கால பயிற்சி இன்று காலை 9 மணிக்கு ஆரம்பிக்கப்பட உள்ளது.

விவசாயம், மிருக பரிபாலனம், தையற்கலை, மனையியல் போன்ற துறைகளில் தெரிவு செய்யப்பட்ட இருபத்தைந்து மாணவிகளுக்கு இப் பயிற்சி வழங்கப்படும். [த-90]

## கான்ஸ்டபிளை கொன்ற கான்ஸ்டபிள்!

கொழும்பு, ஏப். 20

மட்டக்களப்பு மாவட்டம் மல்வத்தையில் கடந்த செவ்வாயன்று பொலீஸ் கான்ஸ்டபிள் ஒருவர் மற்றொரு கான்ஸ்டபிளைச் சுட்டுக் கொன்று விட்டு, தன்னைத் தானே சுட்டு தற்கொலை செய்து கொண்டார்.


பொலீஸ் தலைமை அலுவலக அறிக்கை ஒன்று இத் தகவலை வெளியிட்டது.

உயிரிழந்தவர்கள் இருவரும் ஒரே பொலீஸ் நிலையத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் —

திடீரென ஏற்பட்ட வாக்கு வாதத்தை அடுத்து ரிசேர்வ் பொலீஸான பேர்ளி ரணசிங்க என்பவர் நிரந்தர சேவையில் உள்ள தர்மசிறி அமரசிங்க என்ற கான்ஸ்டபிளைக் கொன்று விட்டு தற்கொலை செய்து கொண்டார் என்றும் தெரிவிக்கப்பட்டது. [உ]

## 16ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணுக்கு: 07 — 12 — 1945



விண்ணுக்கு: 19 — 04 — 1976

செல்வன்

### சோமசுந்தரம் குணசேகரம் [குணம்]

அணைந்த ஓர் அன்புத் தீபம் – என்றும்
அணையாத எங்கள் பாசதீபம்!

பாசத்தின் ஒளிவிளக்கே! அன்பின் உறைவிடமாய், பண்பின் சிகரமாய் விளங்கி, என்றென்றும் எம் நினைவுகளில் நிலை கொண்டு வாழும் எங்கள் பாச தெய்வத்தின் ஆத்மா சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!!

பெற்றோர், சகோதரர்கள்,
கு. ஜெயந்தி (பெறாமகள்).

ஆறுகால்மடம்,
ஆனைக்கோட்டை.

[20624]

## 33 ஆம் நாள் நினைவஞ்சலி

மண்ணில்: 31 — 01 — 1932



விண்ணில்: 19 — 03 — 1992

### அமரர் கபிரியேல் பிரகாசம்

['பாரியகம்', சென். ஜேம்ஸ் வீதி, வயாவிளான்.]

அமரர் கபிரியேல் பிரகாசம்
களமது காண்குறாஉம் காளையுமல்லர்
கருத்தது கொண்டு வாழ்ந்த புனிதன்
தேவன் பதமலர் தினம் தினம் சூடி
பாவவிருள்தனை நீக்கும் சோதியன்
சேவடிதன்றலை சார்ந்திடச் சென்றனன்
தாகம் அவற்கது! நமக்கிது தாயகம்!
ஆக, அவர் பிரிவிற்கிரங்குதல் மனிதம்
பெற்றவர்- பிறந்தவர்- உற்றவர்- ஊரார்
இற்றைவரை பிரகாசம் இழந்தவிளக்கென
நாமிங்கிருக்கப் போயினன் போனதே
நாமிதயத்தைப் பிழிந்து ஊற்றுவதன்றி
யாம்செய் கைமாறு தானெதுவுளதோ.

அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இன்று [20-04-92] திங்கட்கிழமை காலை 7-15 மணிக்கு கோப்பாய் புனித சூசையப்பர் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் அத்திருப்பலியிலும், மதிய போசனத்திலும் கலந்துகொள்ளும்படி அன்புடன் அழைக்கின்றோம்.

உங்கள் நினைவால் துயருறும்:

அன்பு மனைவி, மகள், மகன்,
மருமகன், பேரப்பிள்ளைகள் (ரஜிதா,
சகிலன்), உற்றார், உறவினர்கள்.

த. பன்னீர்ச்செல்வம்,
கிராம சேவையாளர்,
இராஜ வீதி, கோப்பாய் வடக்கு.

(20605)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### தேவை

தேநீர்சாலையில் உணவு பரிமாறும் வேலைக்கு ஆண்கள் உடன் தேவை. அனுபவம் உடையவர்கள் நேரில் சமுகம் தரவும். பம்பாய் உணவு இன்சுவையகம், 226, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். [4675]

### திருமண சேவை

உங்கள் தகுதிக்கு ஏற்ப மணமக்களைத் தேர்ந்து எடுத்துக் கொள்ளலாம். தொடர்பு: பொ. மோகன், ஸ்ரீராம் திருமண சேவை, புலோலி மேற்கு - மாயக்கை, பருத்தித்துறை. [2060 4]

### புலமைப் பரிசில் பரீட்சை

19-04-92 ஞாயிறு நடைபெறவிருந்த ஆண்டு 5 [1992] மாதிரிப் பரீட்சை 21-04-92 செவ்வாய் மு. ப. 8-00 — மு. ப. 11-00க்கும், ஆண்டு 5 [1991], 23-04-92 வியாழன் மு.ப. 7-00 மு.ப. 11-00க்கும் நடைபெறும். புதிய கல்வி நிலையம், 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். [20643]

ஆண்டு 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான விசேட வினாத்தாள்கள் மலிவாகப் பெற்றுக்கொள்ளலாம். விடை அளித்துத் தந்தால் இலவசமாகத் திருத்திக்கொடுக்கப் படும். Bond Institutes, 58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். [சி/1888]

### விற்பனையாகின்றன

கடந்த கால O/L, A/L வினா - விடைகள் பட்டப் படிப்பு மாணவர்களுக்கான இங்கிலாந்தின் பொருளாதார வரலாறு, அப்பியாசக் கொப்பிகள் மலிவு விலையில் விற்பனையாகின்றன. அறிவகம், 374, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். [சி/2203]

### செவ்வாய் மாற்றம்

எங்கும் விற்பனையாகின்றது. 27-4-92 செவ்வாய் மாற்றத்தால் வரட்சி, வெப்பம், குண்டு வெடிப்புக்கள் தணியும், மழையும் உண்டு. முப்படைகளின் தாக்குதல்கள் பிசுபிசுக்கும். மீண்டும் அமைதி. சோபிதா, ரகுநாதன் புத்தகசாலைகள் யாழ்ப்பாணம். [பேராசிரியர் சத்தியதாஸன்] விலை ரூ. 7/- [4667]

## 2 ஆவது ஆண்டு நினைவஞ்சலி

"உயிர்ப்பும் உயிரும் நானே என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான்"



பிறப்பு: 27 — 03 — 1923

இறப்பு: 20 — 04 — 1990

### அமரர் S.S. மரியான் தியாகராஜா

[இளைப்பாறிய புகையிரத நிலைய அதிபர்]

ஆண்டிரண்டு மறைந்திடினும் - உங்கள்
அன்பு முகம் எம் மனதை விட்டகலா.

இவரது பிரிவால் துயருறும்:
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

இல. 36/1, சுருவில் வீதி,
ஊர்காவற்றுறை. [20486]

## 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணக வாழ்வு: 18 — 06 — 1945

விண்ணக வாழ்வு: 21 — 04 — 1991

திருமதி
### றெஜினா றீற்றா தியாகராசா
(றீற்றம்மா)

அன்போடு வாழ்ந்து, அறத்தின் வழிநின்று குடும்ப ஒளி விளக்காய் என்றும் திகழ்ந்து எமைப் பிரிந்த திருமதி றெஜீனா றீற்றா தியாகராசாவின் ஆன்ம இளைப்பாற்றிற்காக நாளை [21-4-1992] செவ்வாய்க் கிழமை காலை 7 மணிக்கு நல்லூர் ஆசீர்வாதப்பர் ஆலயத்தில் திவ்விய பூசைப்பலி ஒப்புக் கொடுக்கப் படும். உற்றார், உறவினர், நண்பர்கள் பூசைப்பலிக்கும் சமுகமளித்து இல்லத்துக்கும் வருகை தருமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

கணவன், பிள்ளைகள்,
மருமக்கள். பேரப்பிள்ளைகள்,
சகோதரர்கள்.

சீ. தியாகராசா,
46/11, ஆசீர்வாதப்பர் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம். [20638]


**SUBRA**

சித்தன்கேணி.

விசேட ஆங்கில வகுப்பு

ஆசிரியர், எழுதுவினைஞர், ஏனையோருக்கான அனுமதி பெற்ற வகுப்புகள்

N. C. E.
Follow me
ESOL

ஆகிய வகுப்புகள் ஆரம்பமாகின்றன

ஆரம்பம்:
20-04-1992
(இன்று) 4 மணி

ஆசிரியர்:
திரு. தெய்வதவபாலன்

92 A/L வினா-விடை வகுப்புகள்
94 A/L கணித, விஞ்ஞான வகுப்புகள்

O/L பகல நேர வகுப்புகள் ஆரம்பமாகின்றன.

ஆரம்பம்:
21-04-1992
[4673]


## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



செல்வி
### குலசிங்கம் தனலஷ்மி

(யாழ்: திருக்குடும்ப கன்னியர்மடம்- பழைய மாணவி)

மலர்வு: 1969—02 05

உதிர்வு: 1990—05—14

திதி: 1992—04—20

அன்பு மகளே! அருமைச் செல்வமே! ஓடி மறைந்த
தம்மா ஈராண்டுகள்
வாழுகின்ற வையமதில் வாழத்தானே நீ பிறந்தாய்
வாழ்ந்த இங்கு எத்தனைபோ? வா என்று காலன்
அழைத்தானே!
மற்றவர்கள் மறக்கவா அவன் உனை அழைத்தான்
மறப்போம் என்றா நீயும் இருந்தாய்.

ஆசைக்கு அன்பு மகளாயும்
அண்ணனுக்கு அன்புத் தங்கையாயும்
பாசத்திற்கு இணைபிரியா அக்காவாயும்
உற்றாருக்கு உன் அன்பு நட்பையும்
வழங்கியா எமை நீ பிரிய வேண்டும்.

உன் பிரிவால் வாடும்;
அப்பா, அம்மா, அன்ரி, அண்ணா,
தம்பி, தங்கைமார்.

க. குலசிங்கம்,
கே. கே. எஸ். வீதி.
யாழ்ப்பாணம்.
(மனோகராத் தியேட்டர் முன்பாக) [20484]

## 31-ம் நாள் நினைவஞ்சலி — 116-ம் நாள் நினைவஞ்சலி



### ஆறுமுகம் வேலுப்பிள்ளை

மலர்வு: 04—08—1920

உதிர்வு: 22—03—1992



### வேலுப்பிள்ளை தங்கம்மா

மலர்வு: 07—10—1924

உதிர்வு: 28—12—1991

தாயை இழந்து ஆறாத்துயரில் மூழ்கிய வேளையில்
தந்தையே உம்மையும் காலன் அழைத்தனனோ!

எமது அன்புத் தெய்வங்களை நினைவு கூர்ந்து அவர்களின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

எமது தந்தையாரின் அந்தியேட்டி வைபவத்திலும், நாளை [21-04-92] செவ்வாய்க் கிழமை நடைபெறும் வீட்டுக்கிரித்தியத்திலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அழைக்கின்றோம்.

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

'மதி அகம்'.
24/3, கனகரெட்ணம் றோட்,
அரியாலை, யாழ்ப்பாணம். [சி-1934]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### செயலில் திருந்த வேண்டும்

தென்னிலங்கையைச் சேர்ந்த பௌத்த குருமார்களின் நல்லெண்ணத் தூதுக்குழு ஒன்று கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வரவுள்ளது.

தாங்கள் அரசாங்கத்தின் பிரதிநிதிகளாக அல்லாமல் தனிப்பட்ட முறையில் நல்லெண்ணத்துடனேயே யாழ்ப்பாணம் வருவதாக தூதுக்குழுவின் அமைப்பாளரான வண. மாதம்பகம அஸ்ஸஜி தேரர் கூறியுள்ளார்.

பௌத்த பிக்குகள் தீவிரவாதிகள், இனவெறியர்கள், தமிழ் மக்கள் மீது ஆதிக்கம் செலுத்த முனைபவர்கள் என்று பரவலாக நிலவி வரும் தவறான கருத்தை நீக்குவதே தமது யாழ். விஜயத்தின் முக்கிய நோக்கம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

பௌத்த பிக்குமார் தமது சமய, ஆன்மீகப் பணிகளோடு மட்டும் நிற்காமல், அரசியலில் அளவுக்கு அதிகமாகத் தலையிட்டு வருவது இன்று நேற்று நடப்பது அல்ல. இலங்கை சுதந்திரம் அடைந்த காலத்தில் இருந்து நாட்டு அரசியலில் செல்வாக்குள்ள ஒரு மாபெரும் சக்தியாக பௌத்த மகாசங்கம் விளங்கி வருகிறது.

அது குறித்துத் தமிழர்கள் கவலைப்படவில்லை ஆனால் தமிழர்கள் இந்த நாட்டின் ஒரு தனி இனம். சிங்கள— பௌத்தர்களுக்கு உள்ள உரிமைகளை தமிழ் — இந்துக்களும் அனுபவிக்க உரித்துடையவர்கள் என்ற மனுநீதியை, சகிப்புத் தன்மையை உணருவதற்கு பௌத்த குருமார் மறுத்து வருகிறார்கள். இதுவே தமிழர்களுக்கு உள்ள கவலை எல்லாம்.

பௌத்த குருமார்கள் இனமதத் தீவிரவாதிகள், தமிழர்கள் மீது ஆதிக்கம், அடக்குமுறை செலுத்த நினைப்பவர்கள் என்று தமிழர்கள் வீண் பழி சுமத்துவதாகக் கூற முடியாது. அவை கற்பனையில் உதித்த குற்றச்சாட்டுகளும் அல்ல. கடந்த கால நிகழ்வுகளும், அவற்றின் விளைவுகளும் பௌத்த குருமாரில் மிகப் பெரும்பாலானவர்கள் துவேசப் போக்குடையவர்கள் என்பதையே நிலை நிறுத்துகின்றன. அகிம்சையையும், கருணையையும் போதித்த போதி சத்துகுருவரின் நெறிகளுக்கு முரணாகப் பேசி வருவதாலும் நடந்து வருவதாலுமே அத்தகைய கருத்து உருவானது.

இந்த நாடு சிங்கள — பௌத்தர்களுக்கு மட்டுமே உரித்துடையது; ஏனையோர் அவர்கள் வழங்கும் சலுகைகளோடு திருப்திப்பட வேண்டியவர்கள். பௌத்தம் காப்பாற்றப்பட வேண்டிய புண்ணிய பூமியாக இலங்கை இருப்பதால் அதனை அடுத்தவர்கள் தமது சொந்தமாக்க அனுமதிக்க இயலாது என்ற கற்பனா வாதங்களுக்குச் செயல் வடிவம் கொடுக்க மகாசங்கத்தினரில் பெரும் பகுதியினர் முன் நிற்கின்றனர்; தூண்டுதலாக இருக்கின்றனர்.

தம்மிது தமிழர்கள் கற்பனையில் உதித்த கருத்தால் தவறான அபிப்பிராயம் கொண்டுள்ளார்கள் என்று பௌத்த குருமார் நினைப்பது தவறு. தவறுகள் தப்புகள் முழுக்க முழுக்க தங்களிடமே உண்டு என்பதை அவர்கள் உணர்ந்திருந்தால், திருந்தினால் தமிழர்-சிங்களவர் உறவில் உள்ள விரிசலைக் குறைக்கலாம்.

தம்மைப் பற்றித் தமிழர்கள் கொண்டுள்ள கருத்தை பௌத்த குருமார் தங்கள் செயல் மூலமே நீக்க முடியும். சொல் மூலம் அல்ல. அவர்களின் யாழ். விஜயம் அதற்கு அத்திவாரமாக விளங்குமானால் கசப்புணர்வு நீங்கி, நட்புறவு, பரஸ்பர நம்பிக்கை சமாதானம் என்பன பிறக்க வழி பிறக்கும்.

# உறுதியான அரசியல் தீர்வு இல்லையேல் தனிநாடு பிரிவதை தடுக்க முடியாது

## ரொய்ட்டருக்கு பாலசிங்கம் பேட்டி

சர்வதேச செய்தி நிறுவனமான ரொய்ட்டரின் கொழும்புச் செய்தியாளர் கடந்த வாரம் யாழ்ப்பாணம் வந்திருந்தார். அவ்வேளை அவர் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கத்தைப் பேட்டி கண்டார்.

அந்தப் பேட்டியை கொழும்புத் தமிழ்த் தினசரி ஒன்று பிரசுரித்திருந்தது. அதனை இங்கு கட்டுரை வடிவில் தந்திருக்கிறோம்.

தென்பகுதியில் இருந்து சமாதானத் தூதுக்குழுக்கள் யாழ்ப்பாணத்துக்கு வந்து சென்றுள்ளன.

பௌத்த பிக்குமார்களும் வரவுள்ளார்கள், எனினும் அமைச்சர் தொண்டமானின் சமாதானத் தீர்வுக்குரிய ஆலோசனைகள் உட்பட, சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்காக மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளுக்கு அரசாங்கத்திடம் இருந்து எந்த விதமான உறுதியான ஆதரவு சமிக்ஞைகளும் இதுவரையில் வெளியிடப்படவில்லை.

ஆனால் எங்களது இந்த நிலைப்பாட்டை, புலிகள் பலவீனமடைந்துள்ளதாலேயே பேச்சுவார்த்தை முயற்சிகளுக்கு இணக்கம் தெரிவித்துள்ளார்கள் என்று அரசாங்கம் தப்பான அர்த்தத்தைக் கற்பித்து வருகின்றது.

தமிழர்களின் அரசியல் அனுபவத்தில், ஒப்பந்தங்களில் கூறப்பட்டவை எவையுமே நிறைவேற்றப்படாமல் போனதுடன் அவைகள் கிழித்தெறியப்பட்டது தான் நடந்தது

இவ்வாறான நிகழ்வு எதுவும் இனிமேல் நிகழக் கூடாது என்பது தான் எமது விருப்பம். எனவே தான் எமது கோரிக்கையான தமிழீழக் கோரிக்கைக்கு மாற்றீடான ஆலோசனைகள் எதனையும் அரசாங்கம் முன்வைக்குமானால் அது குறித்து, நிபந்தனையற்ற முறையில் சர்வதேச மத்தியஸ்தத்துடனான பேச்சுவார்த்தைகளில் ஈடுபட நாம் தயாராக இருக்கின்றோம்.

### அரசின் பொறுப்பு

இவ்வாறான ஒரு பேச்சுவார்த்தைக்குரிய சாதகமான சூழ்நிலையையும், அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே பரஸ்பர நம்பிக்கைக்கு ஏதுவான பாலம் ஒன்றையும் ஏற்படுத்த வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பாகும்.

இத்தகைய ஒரு சூழ்நிலை யுத்தமும், பலாத்காரமும் அற்றதாகவும், வட - கிழக்கு மக்களின் நல்லெண்ணத்தையும், நம்பிக்கையையும் பெறக் கூடியதுமானதாகவும் அமைய வேண்டும்.

வட - கிழக்கின் மீது திணிக்கப்பட்டுள்ள பொருளாதாரத் தடை நீக்கப்பட்டு அங்கு புனர் வாழ்வுப் பணிகள் ஆரம்பிக்கப்பட வேண்டும்.

கண்காணிப்புடன் கூடிய போர் நிறுத்தம் ஒன்றிற்கும் புலிகள் தயாராக இருக்கிறார்கள்.

எனினும் வெளிநாடு ஒன்றினதோ அல்லது ஐக்கிய நாடுகளினதோ அமைதி காக்கும் படை ஒன்று போர் நிறுத்தத்தைக் கண்காணிப்பதற்குப் பதிலாக, இரு சாராருக்கும் பொதுவான, செயற்திறன் மிக்க ஒரு கண்காணிப்பு குழு ஏற்பாடு செய்யப்படுவதையே புலிகள் விரும்புகிறார்கள்.

### சமாதானக் கதவுகள்

தற்போது முற்றுகைக்கு உள்ளாகியிருக்கும் யாழ். குடாநாடு மீது பாரிய இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப் படுமானால், சமாதான முயற்சிகளுக்காக எம்மால் திறந்து வைக்கப்பட்டிருக்கும் கதவுகள் இழுத்து மூடப்படும்.

பொருளாதாரத் தடை உட்பட பல தரப்பட்ட நெருக்கடிகளுக்கு உள்ளாகியிருக்கும், தமிழ்ப் பிரதேசத்தில் யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேளையில், பிரச்சினைத் தீர்வுக்கான பேச்சுவார்த்தைகளில் ஈடுபடமுடியாது

நியாயமானதும், நிரந்தரமானதும், உறுதியானதுமான [பேச்சுவார்த்தை மூலம்] அரசியல் தீர்வு மூலம் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படாவிட்டால், தனிநாடு உருவாகுவதை தடுக்க முடியாது.

இதற்கு முன்னோடியாக பொலீஸ், நீதி மற்றும் நிர்வாகத்துறைகளுக்கு அவசியமான ஸ்தாபன ரீதியிலான அமைப்புக்கள் புலிகளினால் வடக்கில் உருவாக்கப்பட்டு வருகின்றன.

### யுத்த நிலை

வட-கிழக்குப் பகுதிகளில் எமக்குச் சாதகமான இடங்களிலும் வாய்ப்பான வேளைகளிலும் அரச படைகளின் மீது மின்னல் வேகத் தாக்குதல்களை மேற்கொள்ளும் போர்த் தந்திர முறைகளை நாம் கையாண்டு வருகின்றோம். அதில் குறிப்பிடத்தக்க வெற்றிகளை அடைந்துள்ளோம்.

கடந்த மூன்று நான்கு மாதகாலத்தில் இப் புதிய போர்த் தந்திர நடவடிக்கையின் மூலம் வவுனியா, மன்னார், முல்லைத்தீவு உட்பட பல இடங்களிலும் இடம் பெற்ற யுத்தம் மற்றும் பாதுகாப்புப் போர் நடவடிக்கைகளில் 500க்கும் மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டு, பெருந்தொகையான ஆயுதங்களும் வெடிமருந்துகளும் இராணுவத்தினரிடம் இருந்து கைப்பற்றப்பட்டுள்ளன.

### ஒவ்வொரு புலியும் ஒரு டாங்கியே!

டாங்கி எதிர்ப்பு ஆயுதம் ஒன்றை இராணுவத்தினரிடம் இருந்து புலிகள் கைப்பற்றியுள்ளார்கள் என்பது உண்மையே.

அரச படைகளிடம் உள்ள நவீன டாங்கிகள் புலிகளுக்கு ஒரு பெரிய சவால் அல்ல. ஏனெனில் புலிப்படையில் உள்ள ஒவ்வொரு போராளியும் ஒரு மனித டாங்கியே எனக் குறிப்பிட்டார்.

நிலக்கண்ணி வெடிகளைப் போலவே, கடற்கண்ணி வெடித் தாக்குதலின் மூலம் கடற்படையினர் மீது தாக்குதல் நடத்துவதில் புலிகளின் ஒரு பிரிவினரான கடற்புலிகள் அண்மைக் காலங்களில் பெருவெற்றி கண்டுள்ளனர்.

யாழ்ப்பாணத் தீவுப் பகுதிகளைக் கைப்பற்றிவிட்ட படையினர் அங்கு எவ்வித மான அரச நிர்வாகத்தையும் ஏற்படுத்த முடிய திருப்பது தெரியும்.

ஆனால் எமது நோக்கம் அரச நிர்வாகத்தை ஸ்தம்பிக்கச் செய்வதுதான் என்பதல்ல, தற்போது யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய இடங்களில் அரச நிர்வாகம் நடைபெறுகின்றது. இதனை நிறுத்த வேண்டும் என்ற தேவை எமக்கில்லை.

### எதிர்கொள்ள நாம் தயார்

யாழ்ப்பாணத்தைப் பொறுத்த மட்டில் மக்கள் [illegible] பிரதேசம் என்பதால் இங்கு மேற்கொள்ளப்படும் எந்த வொரு பாரிய இராணுவ நடவடிக்கையும் பொதுமக்கள் தரப்பில் மோசமான சேதத்தையே ஏற்படுத்தும். எனினும் இராணுவம் இங்கு பெரும் தாக்குதலை மேற்கொண்டால் அதனை எதிர்கொள்ள நாமும் தயாராகவே உள்ளோம்

இராணுவ நடவடிக்கையின் மூலம் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது.

அதிகார பலத்தைக் கொண்டிருக்கும் அரசாங்கம் உறுதியாகச் செயற்பட்டு பேச்சுவார்த்தை மூலமாக ஓர் இணக்கத் தீர்வுக்கு வரவேண்டும்.

### வெளிநாடுகள் மத்தியஸ்தம்

இலங்கையின் இனப் பிரச்சினை காரணமாக இங்கிருந்து அகதிகளாகவும் பெயர்ந்து வெளிநாடுகளில் தஞ்சமடைந்துள்ளவர்களைப் பராமரிக்கும் பொறுப்பு பல வெளிநாடுகளுக்கும் இன்று ஒரு பிரச்சினையாகியுள்ளது.

இவ்வாறான நாடுகள் இலங்கையின் பொருளாதாரத் துறைக்கென அளித்து வரும் நிதியுதவிகளும் நல்ல முறையில் பயன்படுத்தப்படுவதற்கு இலங்கையின் அரசியல் நிலை உறுதியாக இருக்க வேண்டும் என்று விரும்புகின்றன.

இதனால் அவுஸ்திரேலியா, கனடா, சுவிற்சர்லாந்து ஆகிய நாடுகளும் ஸ்கண்டிநேவிய நாடுகளும் இலங்கையின் இனப்பிரச்சினையைத் தீர்த்து வைப்பதில் மத்தியஸ்தம் வகிக்க விருப்பம் தெரிவித்துள்ளன. ஆயினும் இதற்கு இலங்கை அரசு பதிலளிக்காமல் மௌனம் சாதித்து வருகின்றது. ★

## வெடிகருவி இயக்கி....

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

செய்யப்பட்டு மட்டக்களப்புக்குக் கொண்டு வரப்பட்டது என்றும் —

கதிர்காம பாதயாத்திரையின் போது அம்பாறை மற்றும் மட்டக்களப்பில் இருந்தும் சுதந்திரக் கட்சி ஆதரவாளர்களை ஏற்றி இறக்குவதற்கு அந்த பஸ்ஸை சபாரத்தினம் பயன்படுத்தினார் என்றும் பொலீஸ் வட்டாரங்கள் கூறின.

செல்வநாயகம் என்ற சந்தேக நபர் தலைமறைவாக இருக்கிறார். செல்வநாயகம் எங்கிருக்கிறார் என்பதைக் கண்டுபிடிக்க பல முன்னணி சுதந்திரக் கட்சி உறுப்பினர்களை பொலீஸார் விசாரித்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இப்படி தினகரன் செய்தி கூறுகின்றது

இதேவேளை —

சுதந்திரக் கட்சி அமைப்பாளர்களில் ஒருவர் என்று கூறப்படும் சபாரத்தினம் என்ற நபர் வெறும் வாகனத் தரகர் என்று பொலீஸார் நம்புகின்றனர் என்று மற்றொரு செய்தி தெரிவிக்கின்றது.

பொலீஸ் வட்டாரங்களை மேற்கோள்காட்டி 'த ஐலண்ட்' பத்திரிகை முன்கண்ட தகவலை வெளியிட்டிருக்கின்றது

சபாரத்தினம் களுவாஞ்சிக்குடி சுதந்திரக் கட்சி அமைப்பாளர் என்றும் —

மஹரகம குண்டு வெடிப்புச் சம்பவத்துடன் வேறு எதுவித தொடர்பும் அவருக்கு இல்லை என்பதும் பொலீஸ் விசாரணையில் இருந்து தெரிய வந்திருப்பதாகவும் 'ஐலண்ட்' செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

''சம்பந்தப்பட்ட வானில் குண்டு ஏற்றி கொழும்புக்குக் கொண்டு செல்லப்பட்ட சமயம் அந்த வானில் சபாரத்தினமும் அவரது 12 வயது மகனும் பயணம் செய்தனர்.

''அந்த வானை கொழும்பில் விற்று வேறு ஒரு வாகனத்தை வாங்கும் தரகு வேலையைச் செய்து முடிக்கவே சபாரத்தினம் சந்தேக நபர் ஒருவரினால் கூட்டிச் செல்லப்பட்டார்.

'கொழும்பை அடைந்ததும் சந்தேக நபர் ''உமது தரகு வேலை இனித் தேவையில்லை'' என்று சபாரத்தினத்திடம் கூறினாராம்.

பின்னர் தான் மஹரகமவில் பயன்படுத்தப்பட்ட குண்டு தாம் பயணம் செய்த வானில் ஏற்றி வரப்பட்டது என்ற தகவலை அறிந்து கொண்டார் என சபாரத்தினம் பொலீஸாருக்கு அளித்த வாக்கு மூலத்தில் கூறியுள்ளார்.

அந்த வானில் சபாரத்தினத்தையும், அவரது மகனையும் சந்தேக நபர் ஏற்றி கொழும்புக்குக் கொண்டு வந்தது, அந்த வானில் குடும்பம் ஒன்று பயணஞ் செய்கிறது என்பதாகக் காட்டிக் கொள்ளவே என்றும் பொலீஸார் நம்புகின்றனர்.

மஹரகம சம்பவத்துடன் தனக்கு எதுவிதத் தொடர்பும் இல்லை என்றும் சபாரத்தினம் பொலீஸாரிடம் தெரிவித்திருக்கிறார்''.

இப்படி 'த ஐலண்ட்' செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. [த-எ]

## தெரிவுக்குழு..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

பௌத்த பிக்குகள் குழு கடந்த வாரம் தெரிவுக்குழுவின் தலைவரான சுதந்திரக் கட்சி எம். பி திரு. மங்கள முனசிங்காவுடன் நீண்ட நேரம் பேச்சு நடத்தியதாக கொழும்புப் பத்திரிகைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஈ. பி. ஆர். எல். எப்., புளொட், ஈ.பி.டி.பி. உட்பட சில தமிழ் இயக்கங்களின் பிரதிநிதிகளுடனும் பௌத்தக்குழு பேச்சு நடத்தி இருக்கிறது [உ]

## அன்பளிப்பு

கொழும்புத்துறை ஏப் 20

கிழக்கு மாகாணத்திலுள்ள வைத்தியசாலைகளின் தேவைகளுக்கென 10 அம்புலன்ஸ் வண்டிகளை யுனிசெப் நிறுவனம் அண்மையில் அன்பளிப்பாக வழங்கியுள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

[த 30]

## இந்தியா....

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

யாளர், திரு ஜோன் அமரதுங்காவிடம் கருத்துக் கேட்டார்.

அப்போதே அவர், இந்தியாவில் விதிக்கப்படும் தடை இலங்கையில் தாக்கத்தை ஏற்படுத்தாது என்று தெரிவித்திருக்கிறார்.

இதே வேளை —

விடுதலைப் புலிகள் இயக்கத்தை இந்தியாவில் தடை செய்யவேண்டும் என்று திருப்பதி இந்திரா காங்கிரஸ் மாநாடு செய்த முடிவை எதிர்க்கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா வரவேற்றுள்ளார்.

எனினும்—

இத்தடை, இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணும் முயற்சிகளை நிராகரித்துவிடாது என்று அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# முல்லைத்தீவு மாவட்டத்தில் நடமாடும் செயலகம்

வடமராட்சி, ஏப். 20

முல்லைத்தீவு மாவட்டத்தின் முள்ளியவளைப் பகுதியில் இம்மாதம் 25 ஆம் திகதி நடமாடும் செயலகம் ஒன்று நடைபெறவுள்ளது.

முல்லைத்தீவு அரசாங்க அதிபர் திரு. ஆர். தர்மகுலசிங்கத்தின் தலைமையில் இடம் பெறவுள்ள இந்த அமர்வில் மக்களின் பலதரப்பட்ட பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்படும்.

நடமாடும் செயலகத்தின் போது சகல திணைக்களத் தலைவர்களும் கலந்து கொண்டு, கிராமப்புறங்களுக்கு விஜயம் செய்து மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முயலுவார்கள்.

# மரண அறிவித்தல்கள்

## சுப்பிரமணியம் ஆலாலசுந்தரம்

[ஓய்வுபெற்ற விவசாயப் போதனாசிரியர், யாழ்ப்பாணம்]

அரியாலையைச் சேர்ந்த திரு. சுப்பிரமணியம் ஆலாலசுந்தரம் காலமாகி விட்டார். அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் - பாக்கியம் தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனும் தேவநாயகியின் அன்புக் கணவரும் யசோதை [ஆசிரியை, அலிகார் மகா வித்தியாலயம், கல்-எலிய] யின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற திருமதி அருளம்பலம் லோசநாயகி, திரு. காங்கேயன், திருமதி கனகசபை தங்கரத்தினம், திரு. சதானந்தன், காலஞ்சென்ற கனகேஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், திருமதிகள் தவஞானம் தேவராணி, பாலசிங்கம் மகாலட்சுமி, சாந்தராஜா ஸ்கந்தசோதி [ஆசிரியை], காலஞ்சென்ற இராமநாதன் தியாகராஜா, செல்வி இராசலெட்சுமி, திருமதி சற்குணவதி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று 20-4-92 காலை 9 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். உறவினர், நண்பர்கள் யாவரும் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

2, கச்சேரி ஒழுங்கை,
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம்.

தகவல் :
மனைவி, மகள்
[20647]

வைத்திய கலாநிதி

## பரமேஸ்வரன் சிறீதரன்

[வைத்திய அத்தியட்சகர், கூட்டுறவு வைத்தியசாலை, மூளாய்]

வைத்திய கலாநிதி ப. சிறீதரன் 18-04-92 சனிக்கிழமை மாலை காலமானார். அன்னார் அளவெட்டி இராவத்தையைச் சேர்ந்த பரமேஸ்வரன் — மகேஸ்வரி தம்பதிகளின் கனிஷ்ட புத்திரனும், கோப்பாயைச் சேர்ந்த செ. சுப்பிரமணியம் — மனோன்மணி தம்பதிகளின் மருமகனும், கமலாம்பாளின் அன்புக் கணவரும், சாந்தினி, கலாபரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் மனோகரன், வசந்தகுமாரி, விஜயகுமாரி ஆகியோரின் அன்புச் சகோதரரும், குமாரசாமி, சரவணபவான், பாலகிருஷ்ணன், கெங்காதரன், சிவதாசன், கௌரியம்பாள், லலிதாம்பாள், புவனாம்பாள், கமலேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் நடராசபிள்ளை, சற்குணம், சிவகுமார் ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை கோப்பாயில் நடைபெற்றன. உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

நாவலடி,
கோப்பாய்.
[20645]

தகவல்:
அ. பரமேஸ்வரன்
[தந்தை]

## திருமதி கந்தவனம் கனகம்மா

காலம்சென்ற கந்தவனத்தின் (புடவை வியாபாரம்) அருமை மனைவி திருமதி கனகம்மா (தையலம்மா) 18 - 4 - 92 இல் இறைவனடி எய்தினார்.

இவர் சண்முகநாதன் (மணி—முன்னாள் மாநகர சபை உறுப்பினர்), பாலசிங்கம் (பொறியியலாளர் பொட்ஸ்வானா), சண்முகலிங்கம் (இந்தியா), விபுலானந்தன் [பிரான்ஸ்], பரராஜசிங்கம் [ஜேர்மனி], கணேசமணி [பிரான்ஸ்], சுசிலாதேவி, மல்லிகாதேவி, மதனதேவி, கமலாதேவி, மிகுந்தலாதேவி [கனடா] ஆகியோரின் தாயாரும், தங்கவேலு முதலி [இளைப்பாறிய உதவி அரசாங்க அதிபர்], இராசம்மா [இளைப்பாறிய ஆசிரியர்], நடராசா [முன்னாள் அஸ்பெஸ்றோஸ் தொழிற்சாலை], கார்த்திகேசு [மட்டக்களப்பு கியும் பைப் கம்பெனி], காலஞ்சென்ற தவராசா [குமாரவேல் மருந்துக்கடை, பருத்தித்துறை], எலிசா [பிரான்ஸ்], விஜயதேவி[பொட்ஸ்வானா], கில்டி [ஜேர்மனி], கமலாம்பிகை [பிரான்ஸ்], கண்ணபிரான் [கனடா], யோகேஸ்வரி [இந்தியா] ஆகியோரின் மாமியாரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியை [20-4-92] இன்று திங்கட்கிழமை காலை 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக செம்மணி மயானத்துக்கு எடுத்து செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
வீ. ரகுநாதன்

கந்தவனம்ஸ்
நல்லூர் சந்தை,
கல்வியங்காடு,
யாழ்ப்பாணம்.

[2064[illegible]]

# இன்று

யாழ்ப்பாணம், ஏப். 20

''டொனால்ட் கணேசகுமார்'' வெற்றிக் கிண்ணத்துக்காக யாழ்ப்பாணம் சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் மூன்றாவது வருடாந்த கிரிக்கெட் போட்டித் தொடர் இன்று யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் காலை 8-30 மணிக்கு ஆரம்பமாகின்றது.

யாழ். மத்திய கல்லூரி அதிபர் திரு. என். கே. சண்முகநாதபிள்ளை போட்டியினை ஆரம்பித்து வைப்பார்.

இன்றைய ஆட்டத்தில் வட்டுக்கோட்டை ஓல்ட் கோல்ட்ஸ் அணியை எதிர்த்து சென்றலைட்ஸ் புளூஸ் அணி மோதும். (உ)

★ ★ ★

யாழ். மாநகராட்சி மன்றப் பிரதேசத்திலுள்ள பாலர் பாடசாலைகளின் ஆசிரியர்களுக்கு ஆரம்ப சுகாதார பராமரிப்பு சம்பந்தமான பயிற்சிகள் இன்று தொடக்கம் 6 நாட்களுக்கு வழங்கப்படவுள்ளன.

''யுனிசெவ்'' உதவியுடன் நடைபெறவிருக்கும் இப்பயிற்சிக்கு விண்ணப்பித்தோர் இன்று காலை 8-30 மணிக்கு யாழ். சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. [உ]

★ ★ ★

யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவினால் நடத்தப்படும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று இரு ஆட்டங்கள் நடைபெறவிருக்கின்றன.

யாழ். சென் நிக்கலஸ் அணி, ஆவரங்கால் இந்து இளைஞர் அணியை எதிர்த்து யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட மைதானத்தில் மோதும்.

நெல்லியடி மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெறும் மற்றைய ஆட்டத்தில் வல்வை அணியை எதிர்த்து திக்கம் இளைஞர் அணி மோதும்.

இரண்டு ஆட்டங்களும் இன்று பிற்பகல் 3 மணிக்கு ஆரம்பமாகும். [உ]

# அதிபர்கள் கூட்டம்

யாழ்ப்பாணம், ஏப். 20

பாடசாலை மாணவர் உணவு முத்திரை மற்றும் இரண்டாம் தவணை ஆரம்பித்தல் ஆகியவை தொடர்பாக ஆராய்வதற்காக கோட்ட அதிபர்கள் மற்றும் தனியார். தேசிய பாடசாலை அதிபர்கள், கொத்தணிகள், பாடசாலைகள் ஆகியவற்றின் அதிபர்கள் ஆகியோருக்கான கூட்டங்கள் நடைபெறவிருக்கின்றன.

யாழ் கோட்டத்துக்குரிய கூட்டம் நாளை காலை 9 மணிக்கு யாழ். இந்து குமாரசுவாமி மண்டபத்திலும்—

வடமராட்சி கோட்டத்துக்குரிய கூட்டம் நாளை பிற்பகல் 3 மணிக்கு நெல்லியடி மகளிர் கல்லூரி மண்டபத்திலும் நடைபெறும். (உ)

# படையினர் சூடு!

தச்சங்காடு, வீமன்காமம், குப்பிளான், வளலாய் ஆகிய காவலரண்களில் இருந்தும், பூநகரி — கல்முனைப் பகுதியில் இருந்தும் குடியிருப்புக்களை நோக்கி நேற்று முன்தினம் இரவு படையினர் தொடர்ச்சியாக சில மணி நேரம் 50 கலிபர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். [உ-3]

# வங்காலையில் தாக்குதல்

வங்காலையில் சனியன்று புலிகள் நடத்திய அதிரடித் தாக்குதலையடுத்து அன்றைய தினம் படையினர் தள்ளாடி, வங்காலை முகாம்களில் இருந்து குடியிருப்புக்களை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். ஹெலி ஒன்றும் [illegible]

# தீவுப்பகுதிக்கு 24 பேர் திரும்பிச் செல்ல ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஏப். 20

தீவுப் பகுதியில் இருந்து சிகிச்சை பெறுவதற்காக யாழ். ஆஸ்பத்திரிக்கு வந்த நோயாளர்கள், சிகிச்சையின் பின் இரு தொகுதிகளாக மீண்டும் அங்கு அழைத்துச் செல்லப்படவிருக்கின்றனர்.

முதல் தொகுதியில் இன்று 12 பேரும் —

இரண்டாவது தொகுதியில் நாளை மறுதினம் 12 பேரும்—

காங்கேசன்துறை செல்லும் வாகன அணி மூலம் அங்கு அழைத்துச் செல்லப்படுவர்.

அங்கிருந்து கடற்படையினரின் உதவியுடன் அவர்கள் தமது சொந்த இடங்களுக்குச் செல்வர் என்று தெரிவிக்கப்பட்டது. [உ-3]

## கிழக்கு மாகாணத்தில்

# குண்டு வெடிப்பை அடுத்து வாகனங்கள் தீவிர சோதனை

மட்டக்களப்பு, ஏப், 20

அம்பாறை மினிபஸ் குண்டு வெடிப்பைத் தொடர்ந்து மட்டக்களப்பில் இருந்து களுவாஞ்சிக்குடிக்கு வரும் சகல வாகனங்களும் பெரிய நீலாவணை அதிரடிப்படை முகாம் மற்றும் பாண்டிருப்பு அதிரடிப்படை முகாம் ஆகியவற்றில் வைத்து தீவிர பரிசோதனைக்குட்படுத்தப்படுவதாக அறிவிக்கப்படுகிறது.

இதேவேளை--

செங்கலடி — காத்தான்குடி வீதியில் வழமையாக வாரத்திற்கு 3 நாட்கள் வழங்கப்பட்டு வந்த போக்குவரத்து பாதுகாப்பு நடவடிக்கைகளை, மேலும் விஸ்தரிப்பது என செங்கலடியில் கூட்டப்பட்ட பாதுகாப்பு மாநாட்டில் தீர்மானிக்கப்பட்டது. [உ-த]

## இம்முறை..

(1 ஆம் பக்கத்தொடர்ச்சி)

லில், அரச திணைக்களங்கள், கூட்டுறவுத் துறை, தனியார் துறை, சுயவேலைத் துறை ஆகியவற்றைச் சார்ந்த பல தொழிற் சங்கங்கள் மற்றும் வர்த்தகர் சங்கங்களின் பிரதிநிதிகள் பங்குபற்றினர்.

இக்கலந்துரையாடலில் தமிழீழ அரசியற் பொறுப்பாளர் திரு. தமிழ்மாறன். யாழ் மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. இளம்பரிதி ஆகியோரும் பங்குபற்றி தமது கருத்துக்களைத் தெரிவித்தனர். [அ]

BITSMANS

கல்வி நிறுவனம், மானிப்பாய்.

92 O/L
DAY CLASS

ஆரம்பம்: 23-04-1992
வியாழன் 8-00 a. m.

எமது வழமையான "SUPER GRADE" ஆசிரிய குழுவில்

| | | |
|---|---|---|
| விஞ்ஞானம் | — | J. R. தூரி |
| கணிதம் | — | இரா. அருட்செல்வம் |
| தமிழ் | — | பாலா |
| ஆங்கிலம் | — | M. A. ஹரி |
| வர்த்தகம், சமூகக்கல்வி | — | ராஜன் |
| இந்துசமயம் | — | தர்மா |

A/L 94 கலை, வர்த்தக, விஞ்ஞான வகுப்புகள் 18-04-92 ஆரம்பமாகிவிட்டன.

[சி/1923]

# மரண அறிவித்தல்

## திருமதி சிவபாக்கியம் சிவராசா

மூளாய் றோட் வட்டுக்கோட்டையைச் சேர்ந்த இளைப்பாறிய வட்டு திருநாவுக்கரசு வித்தியாசாலை முன்னாள் ஆசிரியை திருமதி சிவராசா சிவபாக்கியம் 19-4-92 இல் காலமானார்.

அன்னார் இளைப்பாறிய பொலிஸ் உத்தியோகத்தர் வேலுப்பிள்ளை சிவராசாவின் அன்பு மனைவியும், கிரிதரன் [தாதி பயிற்சி மாணவன், யாழ். போதனா வைத்தியசாலை], சிவமலர் [மூளாய் சைவப்பிரகாச வித்தியாசாலை ஆசிரியை தற்போது பலாலி ஆசிரிய பயிற்சிக் கல்லூரி மாணவி], கௌரிதரன் ஆகியோரின் அன்புத் தாயாரும், திருமதி சச்சிதானந்தம் லிங்கேஸ்வரி, சிவனேஸ்வரி [யாழ். போதனா வைத்தியசாலை], திருமதி சத்தியவான் நாமகள் ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று [20-04-92] திங்கட்கிழமை பிற்பகல் 2. 30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் வழுக்கையாறு மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

[20648]

தகவல்:
வே. சிவராசா

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன்( பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 20 - 4 - 1992 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org